# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

## ஆணை நாள் – 08.04.2026

## முன்னிலை

## திரு மு. நடேசன், எம்.எஸ்சி., எல்.எல்.பி.,
## மாநில தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண்.CP.2638/C/2024

திரு R. சுதாகரன் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
மாவட்ட வன அலுவலகம், சேலம் வனக்கோட்டம்,
சேலம் மாவட்டம் - 636 007. .. பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 06.04.2024 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | 18.04.2024 |
| மனுதாரரின் புகார் (CP) மனு நாள் | 25.05.2024 |

****

## ஆணை

இவ்வழக்கு இன்று (03.03.2026) இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு R. சுதாகரன் என்பவர் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7(2)-ன்கீழ் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் மனுதாரர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு F. இர்பான் அகமது, கண்காணிப்பாளர், மாவட்ட வன அலுவலகம், சேலம் வனக்கோட்டம், சேலம் மாவட்டம் என்பவருக்கு பதிலாக திரு பி. வீராசாமி, உதவியாளர், சேலம் வனக்கோட்டம், சேலம் மாவட்டம் என்பவர் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், சேலம் மாவட்ட ஆட்சியரக அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், சேலம் மாவட்டம், மஞ்சக்குட்டை பகுதியில் (புலியூர்) உள்ள பால்மாடீஸ் எஸ்டேட் மொத்த விஸ்தீரணம், சர்வே எண்கள் பற்றிய விவரம், மேற்கண்ட எஸ்டேட்டில்

கடந்த 2014-ஆம் ஆண்டு முதல் 2024-ஆம் ஆண்டு வரை மரங்களை வெட்ட வனத்துறையால் வழங்கப்பட்ட அனுமதி சான்றுகளின் நகல்கள், வனத்துறையில் அனுமதி பெறாமல் மரங்களை வெட்டியிருந்தால் வனத்துறை எடுத்த நடவடிக்கை பற்றிய விவரம், சேலம் மாவட்ட வனத்துறை அலுவலகங்களில் பராமரிக்கப்படும் பதிவேடுகள், கோப்புகள், குறிப்புகள், இரசீதுகள் பற்றிய விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 7 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 18(1)-ன் கீழான புகார் மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் புகார் மனு இன்று (08.04.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ந.க.எண்.4961/2024/ஆர்2 நாள் 25.06.2024 மற்றும் ந.க.எண்.4961/2024/ஆர்2 நாள் 28.02.2025 ஆகிய தேதிகளிட்டு ஏற்கெனவே தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர், இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜராகி அவரது கருத்தினை எடுத்துரைக்கத் தவறியுள்ளார். எனவே, பொதுத் தகவல் அலுவலரால், மனுதாரருக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள தகவல்களை இவ்வாணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு அத்தகவல்கள் போதுமானது எனக்கருதி, மனுதாரரின் புகார் மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

**ஒம்/- (மு. நடேசன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.CP.2638/C/2024</u>**
பெறுநர்
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
மாவட்ட வன அலுவலகம்,
சேலம் வனக்கோட்டம்,
சேலம் மாவட்டம் - 636 007.

**<u>வழக்கு எண்.CP.2638/C/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு ரா. சுதாகரன்,
எண்.2C, பாட்டைத்தெரு,
ஆபத்தாரணபுரம், வடலூர்,
கடலூர் - 607 303.

Copy to: File
SNPS / 15.03.2026